**நிந்தவூர் பிரதேச சபை - 2022**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிந்தவூர் பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிந்தவூர் பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள்,

பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும்

அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதிகள் ரூபா 123,600 தொகை நிதிக்கூற்றுக்களில் மூலதனச் செலவீனமாக தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நிதியாண்டின் கணக்கறிக்கையில் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மூலதனச் செலவீனங்களாக காட்டப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 400,000 பெறுமதியான வீதவரி அறவீட்டிற்கான பொதி நிதிக்கூற்றுக்களில் சொத்தாக காட்டப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா

10,456,949 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 12,716,011 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமான மூலம்** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 10,750,000 | 4,379,800 | 4,906,091 | 4,033,809 | 10,750,000 | 4,577,720 | 5,304,130 | 4,560,099 |
| (ii) | வாடகை | 21,420,000 | 6,963,096 | 6,963,096 | 3,173,466 | 18,320,000 | 10,033,792 | 10,033,792 | 3,173,466 |
| (iii) | உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 2,100,000 | 1,254,300 | 1,272,300 | - | 2,100,000 | 1,323,450 | 1,305,450 | 18,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 5,025,000 | 1,445,976 | 1,445,976 | 2,477,322 | 6,025,000 | 2,750,030 | 2,750,030 | 2,477,322 |
| (v) | கூட்டுத் தொகை | 39,295,000 | 14,043,172 | 14,587,463 | 9,684,597 | 37,195,000 | 18,684,992 | 19,393,402 | 10,228,887 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரி மற்றும் வரி**<br>மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை வீதவரி ரூபா 4,560,099 தொகையாக இருந்ததுடன் ஆண்டின் போது அறவிடல் ரூபா 223,000 தொகையாக இருந்தமையினால் ரூபா 4,033,809 தொகையான நிலுவையொன்று 01 ஆண்டு முதல் 08 ஆண்டுகள் வரையான காலவீச்சில் நிலுவையாக காணப்பட்டது. | நிலுவைகளை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | வருமானத்தினை விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை**<br>2018 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் 15 தொடக்கம் 20 கடையறைகளினை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் சபைக்கு கடந்த ஐந்து வருடங்களில் ரூபா 1,068,000 தொகையான வருமான இழப்பு ஏற்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கடைகளினை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடையறைகளினை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| **(இ)** | **முத்திரைக் கட்டணம்**<br>மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2022 திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டியிருந்த முத்திரைக் கட்டணம் ரூபா 5,453,967 தொகை அறவிடப்படாது காணப்பட்டது. | எதிர்காலத்தில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | முத்திரைத் தீர்வையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு அன்றாட நடவடிக்கைகள் மூலம் கிடைக்கப் பெறுகின்ற காசு மற்றும் காசோலைகளினை பாதுகாப்பாக வைப்பதற்கு காப்புப் பெட்டகமொன்று பயன்படுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இதனை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | காப்புப் பெட்டகமொன்றினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மூன்று வருடங்களுக்கு மேலாக விளைவற்றுக் காணப்படும் ரூபா 71,522 கூட்டுப் பெறுமதிகளினைக் கொண்ட 04 வங்கி நடைமுறைக் கணக்கு மீதிகளினை வருமானம் உழைக்கும் மூலங்களில் ஈடுபடுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. | வருமானம் உழைக்கும் மூலங்களில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சபையினால் மீளாய்வாண்டு காலப்பகுதியில் பொதுமக்களிடமிருந்து நீர் இணைப்பினைப் பெற்றுக்கொள்வதற்காக கொங்கிறீட், தார் மற்றும் கிறவல் வீதியினை வெட்டுவதற்கான கட்டணமாக ரூபா 362,500 தொகை அறவிடப்பட்டிருந்தும், அவ் வீதிகள் சபையினால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டிருக்காமையுடன் அது தொடர்பாக எதுவிதமான ஏடுகளும் பேணப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | வீதிகளினை சீர் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உள்ளுராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட 07 வகையான பொருட்களின் பெறுமதிகள் கணிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நிதியாண்டின் கணக்கறிக்கையில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நன்கொடையாக கிடைக்கப்பெற்ற பொருட்களின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுதல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 07 வாகனங்களினை திருத்தம்செய்து மீளப்பயன்படுத்துவதற்கு அல்லது | கோரிக்கை விடப்பட்டுள்ளது பதில் கிடைத்ததும் | திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது அவற்றினை |

| | | |
|---|---|---|
| அவற்றினை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு 05 வருடங்களுக்கு மேலாக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும். | ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| சபையினால் மீளாய்வாண்டிற்கு தேவையான தேவைப்பட்டியல் மற்றும் பெறுகைத்திட்டம் தயாரிக்கப்படாமல் மீளாய்வாண்டில் 910 மின்குமிழ்கள் மற்றும் 07 டி.டி வயர் கொயில் என்பன ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையினால் குறித்த பெறுகை தொடர்பில் வழங்குனர்களுக்கு மேலதிகமாக ரூபா 192,230 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இது தொடர்பான குறைபாடுகள் எதிர்காலத்தில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | தேவைப்பட்டியல் மற்றும் பெறுகைத் திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட பதவியணியில் 10 வெற்றிடங்கள் காணப்பட்டிருந்த அதேவேளை சபையில் 13 மேலதிக ஊழியர்களும் 25 தற்காலிக ஊழியர்களும் உள்ளடங்கலாக 28 பேர் மேலதிகமாக சபையில் காணப்பட்டிருந்தும், அவர்களை பொருத்தமான முறையில் வேலைப்பிரிப்பு செய்யப்பட்டு சபையின் வருமானப் பிரிவு மற்றும் திண்மக்கழிவகற்றல் பிரிவு போன்றவற்றிற்கு ஈடுபடுத்தி சபையின் வருமானம் மற்றும் திண்மக்கழிவகற்றல் செயற்பாட்டின் வினைத்திறனை அதிகரிக்க சபை தவறியிருந்தது. | எதிர்காலத்தில் உரிய முறையில் பிரிக்கப்பட்டு கடமை மேற்கொள்ளப்படும். | பொருத்தமான முறையில் வேலைப்பிரிப்பு செய்யப்பட்டு சபையின் வருமானப் பிரிவு மற்றும் திண்மக் கழிவகற்றல் பிரிவு போன்றவற்றிற்கு ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் வேலையை விட்டு நீங்கிய 12 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் நிலுவையான ரூபா 85,911 தொகையினை உரிய நபர்களிடமிருந்து அல்லது அவர்களின் பிணையாளியிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையினை உரிய நபர்களிடமிருந்து அல்லது அவர்களின் பிணையாளியிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 திண்மக்கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டு காலப்பகுதியில் திண்மக்கழிவு முகாமைத்துவத்தினை திறம்பட மேற்கொள்வதற்காக ரூபா 4,280,970 தொகை | தற்போது தரம்பிரிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படு | தரம்பிரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலவில் குப்பைகள் தரம்பிரித்தல் நிலையமொன்று அமைக்கப்பட்டிருந்தும் சபையின் எல்லைக்குட்பட்ட 8 வட்டாரங்களிலும் கழிவுகள் அகற்றப்பட்ட போதிலும் அக்கழிவுகள் தரம்பிரித்து சேகரிப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கின்றது. | |

**4.2 சுற்றாடல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் மற்றும் அதன் கீழ் அமுலாகும் பிரமாணங்களுக்கிணங்க அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய 147 தொழில் நிறுவனங்கள் காணப்பட்டிருந்தும், அதில் 82 தொழில் நிறுவனங்களின் காலாவதியான அனுமதிப் பத்திரங்களினை புதுப்பிப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காலாவதியான அனுமதிப் பத்திரங்களினை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |